**<u>சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்</u>**
<u>OS.No. 401 / 2022</u>

**வா.சா.1. தங்கராஜ்** **29.04.2024**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

அசல் வழக்கு சொத்துக்கள் எனக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் எனக்கு பூர்விக வழியில் பாத்தியப்பட்டது. தாவா சொத்து எனக்கு பூர்விக வழியில் பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணத்தை எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பாக விஸ்தி பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிராதில் பூர்விக வழியில் பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ள நான் எதிரிடை அனுபவ உரிமையில் தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ளது எது சரி என்று சொன்னால் பூர்விக வழியில் பாத்தியப்பட்டு பாகவிஸ்தியின் மூலம் கிடைத்தது தான் சரி. தாவா சொத்துக்கள் அரசால் 18.09.2006-ம் தேதி ந.க.எண்.12633/2006/அ/2ன் கீழ் விவசாய நில டி நமுனா ஒப்படைப்பு உத்தரவின் படி இந்த சொத்துக்கள் 4-ம் பிரதிவாதிக்கு அரசால் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்கள் 3-ம் பிரதிவாதியால் 4-ம் பிரதிவாதிக்கு சத்திரப்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் தீர்அளிப்பு ஆவண எண்.14/2007ன் மூலம் பதிவு செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 2006-ல் நில ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள நிலையில் நான் சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளாமல் 4-ம் பிரதிவாதிக்கு இடையூறு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் அரசு அதிகாரிகளை தரப்பினர்களாக சேர்த்து வீண் விவாதம் செய்வதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு இவ்வழக்கின் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு வழக்கு முன்னறிவுப்பு நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 2006-ம் ஆண்டே அரசால் ஒப்படைப்பு செய்யப்பட்ட சொத்தை அந்த சொத்து எனக்கு பூர்விக வழியில் பாத்தியப்பட்டது என்றும் அனுபவ பாத்திய அடிப்படை கோரியும் தாக்கல் செய்துள்ள வழக்கு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும் அதனால இந்த தாவாவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2024.04.29 10:56:29 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்